Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள்- 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆடி -13 | 29-07-2003 | செவ்வாய்க்கிழமை | ஓசை 161




## அரசாங்கத்தின் திட்டவரைவைப் பரிசீலித்து வருகிறோம்

# தமிழ் மக்களின் அபிலாசைகளுடன் கூடியதான மாற்று யோசனை விரைவில் சமர்ப்பிக்கப்படும்!

## கப்டன் அன்பரசி நினைவுநாள் நிகழ்வில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்

(மட்டக்களப்பு)

**இடைக்கால நிர்வாகம் தொடர்பாக சிறிலங்கா அரசாங்கம் முன் வைத்துள்ள நகல் யோசனைகள் தமிழ் மக்களின் அபிலாசைகளை முழுமையாக நிறைவேற்றவில்லை. ஆனாலும் நாம் அதனை நிராகரிக்காது எமது சட்ட வல்லுனர்களுடன் இது குறித்து ஆலோசித்து வருகிறோம். இந்த யோசனைகள் விரிவாக ஆராயப்பட்டு பின்பு மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றவாறு நகல் யோசனையொன்று அரசாங்கத்திடம் விரைவில் கையளிக்கப்படும் என அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் இரவு மட்டக்களப்பு தரவை மீனகம் இராணுவத்தளத்தில் நடைபெற்ற கப்டன் அன்பரசியின் எட்டாவது ஆண்டு நினைவு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அரசியல்துறைப் பொறுப்பாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புலிகள் அமைப்பின் தற்போதைய நிலைப்பாடு தொடர்பாக நள்ளிரவு சுமார் ஐம்பது நிமிடங்கள் உரை நிகழ்த்திய சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஐ.தே.முன்னணி அரசாங்கம் இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக மூன்று வரைவுகளை எமக்கு அனுப்பியிருந்தது. நாம் இரண்டை நிராகரித்து விட்டோம். மூன்றாவதை பரிசீலித்து வருகிறோம். அதிலும்

(8ஆம் பக்கம் பார்க்க)

# விமானக்குண்டு வீச்சில் கொல்லப்பட்ட பொதுமக்கள் நினைவாக நினைவுத்தூபி

## - உருத்திரபுரத்தில் நேற்று திறப்பு


(அலுவலக செய்தியாளர்)

விமானக் குண்டுவீச்சுமூலம் கொல்லப்பட்ட ஒன்பது பொதுமக்களின் நினைவாக நினைவுத்தூபி ஒன்று நேற்று உருத்திரபுரத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

1991ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04ஆம் திகதி சிறிலங்கா விமானப் படையால் கிளி. உருத்திரபுரம் கூழாவடிச் சந்தியில் நடாத்தப்பட்ட மிலேச்சத்தனமான விமானக் குண்டு வீச்சில் கொல்லப்பட்ட சிவநகரைச் சேர்ந்த முருகேசு தர்மலிங்கம், சுந்தரலிங்கம் சந்திரகுமார், உருத்

(8ஆம் பக்கம் பார்க்க)





# மாவிட்டபுரம் திருவிழாவுக்குச் சென்ற பக்தர்கள் மீது படையினர் சோதனை

## கோவில் வளாகத்தில் படையினர் குவிப்பு

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் தேர்த் தீர்த்தத் திருவிழாக்களுக்குச் சென்ற பக்தர்கள் மீது படையினர் கெடுபிடிகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

நேற்றும், நேற்று முன்தினமும் நடைபெற்ற திருவிழாக்களுக்குச் சென்ற பக்தர்கள் மீது படையினர் கடுமையான சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன், அடையாள அட்டைப் பரிசோதனைகளையும் மேற்கொண்டுள்ளார்கள். இதன் போது அடையாள அட்டை கைவசம் வைத்திருக்காதோர் படையினரால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்கள்.

மக்கள் சென்ற வாகனங்கள் கோவிலிலிருந்து இரண்டரைக் கிலோ மீற்றர் தூரத்திற்கு முன்பாகவே நிறுத்தப்பட்டதால் அங்கிருந்து கால்நடையாகவே கோயிலுக்குச் செல்ல வேண்டியிருந்தது. அத்துடன் கைத் தொலைபேசி, புகைப்படக்கருவி என்பவற்றை ஆலயவளாகத்தினுள் எடுத்துச்

(8ஆம் பக்கம் பார்க்க)

# வடமராட்சிக் கடலில் மீனவர்களை இந்திய மீனவர்கள் துரத்தித் தாக்கினர்

## -பருத்தித்துறையைச் சேர்ந்த இருவர் காயம்

தொழிலுக்குச் சென்ற வடமராட்சி மீனவர்களை இந்திய மீனவர்கள் துரத்தித் தாக்கிய சம்பவம் ஒன்று கடந்த 26ஆம் திகதி வடமராட்சிக் கடற்பரப்பில் இடம்பெற்றுள்ளது.

இத்தாக்குதல் சம்பவத்தின்போது பருத்தித்துறையைச் சேர்ந்த முகந்தசாமி (வயது:44); நந்தியானந்தன் (வயது-40) ஆகிய மீனவர்கள் இந்திய மீனவர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்கள்.

தொண்டமானாறு தொடக்கம் தாளையடி வரையான கடற்பிரதேசத்தில் அத்துமீறி மீன் பிடித்துக் கொண்டிருந்த, இந்திய மீன்பிடிப் படகுகளுக்கு அருகாமையில் சென்ற வடமராட்சி மீனவர்களே இவ்வாறு துரத்தித் தாக்கப்பட்டார்கள். இச்சம்பவம் தொடர்பாக வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (33)



தமிழீழக்காவல்துறையின் சிறப்புப் படையணித்தளபதி வண்ணக்கிளி மாஸ்ரர் அவர்களுடன் வவுனியா மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதித்தலைவரான ஜோன் ஓலெக்ஜன் அவர்கள் கடந்த சனியன்று சந்தித்து மணலாறு பிராந்தியத்தின் முன்னரங்கக் காவல் நிலைகள் தொடர்பாக கலந்துரையாடிய போது எடுக்கப்பட்ட படம்.

## உள்ளூர் விமான சேவைகள்

(கொழும்பு)

சிறிலங்காவில் ஜந்து இடங்களுக்கான உள்ளூர் விமானசேவை ஆரம்பிக்கப்படவுள்ளதாக விமானப் போக்குவரத்து அதிகாரி கூறியுள்ளார்.

உள்ளூர் விமான நிலையங்களைப் புதுப்பிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது என்று, சிறிலங்காவின் சிவில் விமானப் போக்குவரத்து சேவைப் பணிப்பாளர் நிமலசிறி கூறியுள்ளார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## - குரங்குப்பாஞ்சான் முகாம் விவகாரம் -

# கண்காணிப்புக்குழுவால் மற்றொரு கடிதமும் புலிகளுக்கு அனுப்பி வைப்பு!

(லண்டன்)

குரங்குப்பாஞ்சான் முகாம் தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு விடுதலைப்புலிகளுக்கு, மற்றுமொரு கடிதத்தை அனுப்பி வைத்துள்ளது.

இந்த முகாம் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தே இக்கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு நேற்று அறிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளின் பதிலை

(8ஆம் பக்கம் பார்க்க.)

# இந்திய மீனவர்களின் அடாவடி குறித்து சிறிலங்காப் பிரதமருக்கு கடிதம்

(கொழும்பு)

இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அடாவடி தொடர்பாக சிறிலங்காப் பிரதமரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ இயக்கத் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் பிரதமருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இலங்கைக் கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் எடுத்துவிளக்கிய அவர் இவ்வா

(8ஆம் பக்கம் பார்க்க.)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

கந்தையா நடராசா என்பவரின் தேசிய அடையாள அட்டை புதுக்குடியிருப்புக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் தவற விடப்பட்டுள்ளது. அ.இல. 802655592 V, இதைக் கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். (சி-8244)


## அவசர கலந்துரையாடல்

கெயர் நிறுவனத்தின் வன்னி அபிவிருத்தி திட்டம், ஏக்கோ திட்டம் சம்பந்தமான மிக முக்கிய கலந்துரையாடல் புதுக்குடியிருப்பு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலகத்தில் நாளை புதன் காலை 10.00 மணிக்கு இடம்பெறும். சம்பந்தப்பட்ட நிறுவன இணைப்பாளர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு இணையத் தலைவர் வேண்டுகின்றார். (26)


## கிளி/மாவட்ட சி.க.கூ.சமாச வங்கி கிளிநொச்சி

## சிறுவர் சேம பரிசளிப்பு வைபவம்

சமாச வங்கியால் முதிர்வுற்ற சிறுவர் சேமங்களுக்கான (முதிர்வு-தொகை 6000) பரிசளிப்பு வைபவம் 30.07.03ல் நடைபெறவுள்ளதால் தகுதி பெற்ற வைப்பாளர்கள் அனைவரும் கலந்து தங்கள் சிறார்களின் பரிசுகளைப் பெற்று சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**காலம் :-** 30.07.2003
**நேரம் :-** பி.பகல் 3.00 மணி
**இடம் :-** கரைச்சி தெற்கு தலைமைக் காரியாலயம் கிளிநொச்சி.

### சிறுவர் சேம சலுகைகள்

- உயர்ந்த வட்டி வீதம் 12%
- வைப்புப்பணம் ஆறாயிரம் (6000) ரூபா பூர்த்தியானவர் பரிசு சீட்டு இழுப்பில் சேர்க்கப்படும்.
- க.பொ.த சா/தரத்தில் 5 D க்கு மேற்பட்டிருந்தால் ஆண்டுக்கு 2000/- ரூபா க.பொ.த உயர்தரம் படிப்பிற்கு உதவுதொகை வழங்கப்படும்.
- பல்கலைக்கழக அனுமதி பெற்றிருந்தால் 5000/- நன்கொடை வழங்கப்படும்.
- சிறுவர் சேமிப்பின் பாதுகாவலர் சேமிப்பு காலத்தில் இறந்து போனால் அச் சேமம் முழுமை பெறும்.
- உங்கள் சிறுவர்களின் எதிர்காலம் சிறக்க நிகழ்காலத்தில் சேமியுங்கள் சி.க.கூ.சமாச வங்கியில்.

**மாவட்ட செயலாளர்,**
**சி.க.கூ.சமாசம், கிளிநொச்சி.**
(3586)



## கிளி/ மாவட்ட கூட்டுறவுச் சங்கங்கள் இணைந்து நடாத்தும்

## 81ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினம்-2003

காலம் -30.07.2003 [புதன் கிழமை] பி.பகல் 2.00 மணி

இடம் -கிளி/மகாவித்தியாலய மைதானம்
தலைமை:-திரு.அ.கேதீஸ்வரன் தலைவர் -கிளி/மாவட்ட கூ.சபை

முதன்மை விருந்தினர்கள்
திரு.தி. இராசநாயகம் அவர்கள் -அரச அதிபர் கிளி/மாவட்டம்
திரு.வோ. இளஞ்சேரன் அவர்கள் -துணைப் பொறுப்பாளர் தமிழீழ நிர்வாகசேவை தமிழீழம்

சிறப்புவிருந்தினர்கள்
திரு.து. கந்தசாமி அவர்கள் :- கூட்டுறவு அ.உ.ஆணையாளர் கிளிநொச்சி
திரு.ஏ. சின்னத்தம்பி அவர்கள் :- கூட்டுறவு அ.உ.ஆணையாளர் (பனை.தெ.வளம்) வன்னி
திரு.செ. முரளி அவர்கள்:- பொறுப்பாளர் -தமிழீழ நிர்வாகசேவை கிளி/மாவட்டம்.

### நிகழ்ச்சி நிரல்

01.பொதுச்சுடர் ஏற்றல்
02.தேசியக் கொடியேற்றல்
03.அக வணக்கம்
04.கூட்டுறவுக் கொடியேற்றல்
05.வரவேற்புரை - திரு க. கணபதிப்பிள்ளை அவர்கள் பொதுமுகாமையாளர் -கரைச்சி தெ.ப.நோ.கூ. சங்கம்
06.தலைமையுரை -திரு அ.கேதீஸ்வரன் அவர்கள் விழாக்குழு
07.பேச்சுப் போட்டியில் முதன்மை பெற்றோர் உரை
08.கூட்டுறவாளர் உரை.

திரு.மா.நடராசா
தலைவர் -கிளி/மாவட்ட கூ.ச.ஒன்றியம்
திரு.வை. குகராசா
தலைவர் -கிளி/முல்லை கிராமிய வங்கி சமாசம்
திரு.க. இராசதுரை
தலைவர் -வடமாகாண பனை.தெ.வ.பேரிணையம்
திரு.க. செல்வராசா
தலைவர் -கிளி/மாவட்ட சி.க.கூ.சமாசம்

09.சிறப்புரைகள்
10.முதன்மை விருந்தினர் உரைகள்
11.சான்றிதழ் பரிசில்கள் வழங்கல்
12.நன்றியுரை க.சிவகுமார் செயலாளர்(விழாக்குழு) கிளி/மா.கூ.சபை

### அரங்க நிகழ்வுகள்

- நடனம் [பாடசாலை மாணவர்கள்]
- பட்டிமன்றம்[அங்கத்தவர்கள் பணியாளர்கள்]
- இசைநிகழ்வு

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-8243)


# உயர்பாதுகாப்பு வலயம் குறித்து ரணிலுடன் பேச கூட்டமைப்பு பா. உறுப்பினர்கள் முடிவு

வடக்கு- கிழக்கிலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் குறித்து சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துப்பேசதமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் முடிவு செய்துள்ளனர்.

உயர்பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான தீர்க் கமான முடிவொன்றைப் பெற்றுக்கொள்ளும் முகமாகவே இச்சந்திப்பு இடம்பெறவுள்ளதாக யாழ். மாவட்ட பா.உ. என். ரவிராஜ் தெரிவித்தார்.

புரிந்துணர்வு ஒப்பந்தம்கைச் சாத்திடப்பட்டு 18 மாதங்களுக்கு மேலாகியும் உயர்பாதுகாப்பு வலயங்கள் குறித்து அரசாங்கம் தீர்க்கமான முடிவுகள் எதனையும் எடுத்திருப்பதாகத் தெரியவில்லை.

இதன் விளைவாக உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசங்களிலுள்ள வீடுகளில் மக்கள் மீளக்குடியேற முடியாத நிலைமை தொடர்கின்றது. இதனால் வடபகுதியில் இன்னமும் மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பவில்லை.

உயர்பாதுகாப்பு வலயங்களுக்கு உட்படாத பகுதியில்கூட படையினர் பொதுமக்களின் வீடுகளைத்தங்கள் தேவைகளுக்குப் பயன் படுத்தும் நிலைமை தொடர்கின்றது. உதாரணமாக கோப்பாய் பொலிஸ் நிலையம் பொதுமக்களின் வீடுகளில்தான் இயங்குகிறது. இதனால் அவ் வீடுகளில் மக்கள் மீளக்குடியேற முடியாதநிலைமைக்குள்ளாகியுள்ளது. ஆனால் அப்பிரதேசம் அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்கு உட்பட்டதல்ல.

இவ்விடயங்கள் குறித்து சிறிலங்கா உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவுடனும் சந்தித்துப் பேசத்திட்டமிட்டுள்ளோம் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

- வட்டக்கச்சிப் பிரதேசத்தில் -

# கட்டாக்காலி கால்நடைகளால் சிறுபோக பயிர் அழிவு

வட்டக்கச்சி இராமநாதபுரம் பகுதிகளில் சிறுபோகப் பயிர்ச் செய்கையை கால்நடைகள் அழித்து வருவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளார்கள்.

கமக்கார அமைப்புக்களால் ஒதுக்கப்பட்டு நீர்பாய்ச்சுவதற்கு தகுதியற்ற மேட்டுக் காணி, காணிகளாக இருக்கும் விதைக்கப்படாத தரவை நிலங்களில் கால்நடைகளை உரிமையாளர்கள் கட்டிமேய்ப்பதும் நீர் வாய்க்கால் ஓரங்கள் வயல் ஓரங்களில் கட்டி மேய்ப்பதும் பயிர்களுக்கு அழிவு செய்வதாக விவசாயிகள் குறிப்பிடுகின்றார்கள்.

இவ்வாறான கால்நடைகள் கயிற்றை அறுத்துக்கொண்டு கட்டாக்காலியாக மேய்கின்றன. இவை குடலைப்பருவமாகவும், கதிர்ப்பருவமாகவும் இருக்கும் பயிர்களை அழிவு செய்வதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (12)

# லெப்.செந்தூரன் நினைவாக நேற்று சைக்கிளோட்டப் போட்டி

லெப். செந்தூரனின் நினைவு நாளை முன்னிட்டு இரணைப்பாலை சென்.அன்ரனிஸ் வி.கழகம் வருடாந்தம் நடாத்தும் விளையாட்டுப் போட்டியில் 50 மைல் தூரம் கொண்ட சைக்கிள் ஓட்டம் நேற்று நடைபெற்று, இப்போட்டி புதுக்குடியிருப்பில் சிவன் கோவிலடியில் ஆரம்பமாகி பரந்தன் சந்தி வரை சென்று அங்கிருந்து மீண்டும் அதே வழியாய் இரணைப்பாலையில் முடிவடைந்தது. இதில் முதலாம், இரண்டாம் இடங்களை சென் அன்ரனிஸ் வி.கழகத்தைச் சேர்ந்த றெக்ஷன் இருதயராசா, எஸ்.யசோ ஆகியோர் பெற்றனர். மூன்றாம் இடத்தை விக்கினேஸ்வரா வி.கழகத்தைச் சேர்ந்த செந்தூரன் பெற்றுக் கொண்டார். (26)


## அறிவித்தல்

### தமிழீழ வைப்பகம்

தமிழீழ வைப்பகத்தின் எக்கிளையிலாவது 01.07 2000 தொடக்கம் 30.09. 2001வரை அடைவுக்கடன் பெற்று உரிய காலத்தில் அவற்றை மீளச் செலுத்தத் தவறிய கடனாளிகளின் அடைவு நகைகளைத் தமிழீழ வைப்பகம் விற்பனை செய்யத் தீர்மானித்துள்ளது. எனவே உரியவர்கள் 08.08.2003 ஆம் நாளுக்கு முன்னர் அடைவு நகைகளை மீட்டெடுக்குமாறு அல்லது புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**மேலாளர்,**
**ஆளுகைப்பகுதி,**
**நடுவப்பணியகம்,**
**தமிழீழ வைப்பகம்.**

(சி-8446)



## பொதுமுகாமையாளர் பணிக்கான

## விண்ணப்பம் கோரல்

### முத்து ஐயன் கட்டு பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம்

**தகைமைகள்:-**

I. அகவை 25-60வரை

II. கூட்டுறவுப்பணியாளரின் 8வது சம்பளத்திட்டத்தில் இது அமைந்த பதவியில் மூன்று வருடத்திற்குக் குறையாத அனுபவம்

அல்லது

கூட்டுறவுப்பணியாளர் 9வது சம்பளத்திட்டத்தில் அமைந்த முகாமை மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆறு வருடத்தில் குறையாத அனுபவம்

அல்லது

III. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப்பட்டதாரி அல்லது அதற்கிணையான கல்வித்தகைமை வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டப் பதவியில் ஆறு வருடத்துக்குக் குறையாத அனுபவம்

அல்லது

IV. கூட்டுறவுப்பணியாளர் உயர்தர சான்றிதழ் க.பொ.த.உயர்தரத்தில் மூன்று பாடசித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகக் கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டப் பதவியில் எட்டு வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

V. விண்ணப்ப முடிவுத் திகதி - 25-08-2003

VI. அடிப்படை ஊதியம் - 5250 - 7750
120X10-130X10

**தலைவர்,**
**முத்து ஐயன்கட்டு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்,**
**ஒட்டுசுட்டான்.**

(3467)

# சதாம் மறைந்திருப்பதான தகவலையடுத்து அமெரிக்கப் படையினர் திடீர் தாக்குதல்!

## – ஐந்து அப்பாவி மக்கள் உயிரிழப்பு

**ஈராக் தலைநகர் பாக்தாத் அருகே ஒரு மாளிகையில் சதாம்ஹுசைன் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலையடுத்து அங்கு அமெரிக்கப் படைகள் அதிரடித் தாக்குதல் நடத்தின. இதில் அப்பாவி மக்கள் ஐந்து பேர் உயிரிழந்தனர். மேலும் எட்டுப் பேர் படுகாயமடைந்தனர். எனினும் சதாம் அங்கு இல்லையென பின்னர் தெரியவந்துள்ளது.**

ஈராக்கை கைப்பற்றிய பின்னர் அமெரிக்க படையினர் சனாதிபதி சதாம் ஹுசைனையும் அவரது குடும்பத்தினர் உட்பட முக்கிய உறுப்பினர்களையும் பிடிப்பதற்காக நாடு பூராகவும் தீவிர தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது.

மேலும், மொசூல் நகரில் இடம்பெற்ற தாக்குதலொன்றில் சதாமின் இரு புதல்வர்களும் கொல்லப்பட்டு விட்டதாக அமெரிக்கப் படையினர் தெரிவித்ததோடு அது தொடர்பான புகைப் படங்களையும் வெளியிட்டுள்ளது.

இந்நிலையில், சதாம் மறைந்திருப்பதாக கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் இந்த தாக்குதல் நடைபெற்றுள்ளது.

மன்சூர் மாவட்டத்தில் பழங்குடியின இளவரசர் ரதியா அலி அமீன் என்பவருக்குச் சொந்தமான அரண்மனையில் சதாம் ஹுசைன் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலையடுத்து இந்த அரண்மனையின் கதவுகளை குண்டு வைத்து தகர்த்த அமெரிக்கப் படைகள் உள்ளே நுழைந்து தீவிர தேடுதலில் ஈடுபட்டன.

ஆனால், சதாம் ஹுசைன் அங்கு இல்லையென்பது உறுதி செய்யப்பட்ட நிலையில் அவ்வேளை, அங்கிருந்து புறப்பட்ட காரில் சதாம் ஹுசைன் தப்பிச் செல்வதாக சந்தேகித்த அவர்கள் அதன் மீது குண்டுகளை வீசியும் துப்பாக்கியால் சுட்டும் தாக்குதல் நடத்தியதில் அதில் பயணம் செய்த ஐந்து பேர் உயிரிழந்தனர்.



பாக்தாத்திற்கு தெற்கேயுள்ள கர்பாலா நகரில் ஈராக்கியர் ஒருவரை தள்ளிச் செல்லும் அமெரிக்க இராணுவ வீரர்.

# பிணை மனு நிராகரிப்பு

(சென்னை)

தி.மு.க. முன்னாள் அமைச்சர் த. கிருட்டிணன் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள மு.க. அழகிரியின் பிணை மனுவை சென்னை உயர் நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது.

மனுவை விசாரித்த நீதிபதி கனகராஜ் இவ்வழக்கில் காவல் துறை விசாரணை இன்னும் முடிவடையவில்லை என்பதால் ஜாமின் மனுவைத் தள்ளுபடி செய்வதாக அறிவித்துள்ளார்.

# அல்-ஹைதாவின் அச்சுறுத்தல் ஐரோப்பாவில் தொடர்கிறது

## - பிரான்ஸ் புலனாய்வாளர்

(பாரிஸ்)

அல்-ஹைதா இயக்கத்தினர் தொடர்ந்தும் ஐரோப்பிய நாடுகளுக்கு அச்சுறுத்தலாக இருந்து வருகின்றனர் என்று பிரான்சின் புலனாய்வுத்துறை கூறுகின்றது.

அல்-ஹைதா இயக்கத்தின் தகவல் பரிமாற்று சேவை பாதிக்கப்பட்டுள்ளது என பிரான்ஸ் இரகசியப் பொலிஸ் பிரதம அதிகாரி தெரிவித்துள்ளார்.

ஆயினும் இந்த இயக்கம் தொடர்ந்தும் தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதற்கான தகவல்கள் கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.



பிலிப்பைன்ஸ் சனாதிபதி குளோரியா மகபகல் அரோயோவுக்கு விசுவாசமான படையினர் மனிலா நெடுஞ்சாலையில் ரோந்து செல்கின்றனர். சிறியளவிலான சதிப்புரட்சி நேற்றிரவு முறியடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# லைபீரிய சுதந்திரதின விழாவில் டெயிலர் பதவி விலகுவதாக அறிவிப்பு!

## - எட்டு நாள் வன்முறைகளில் 1000 பேர் பலி

(மொன்ரோவியா)

லைபீரியாவில் நிலவிவரும் உள்நாட்டுப் போரை முடிவிற்குக் கொண்டு வருவதற்காக அந்நாட்டு சனாதிபதி சார்லஸ் டெயிலர் பதவி விலகுவதாக அறிவித்துள்ளார்.

அந்நாட்டில் அரசுக்கு எதிராக இயங்கி வரும் தீவிரவாதக் குழுக்கள் சனாதிபதி டெயிலர் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் காரணமாக ஏற்பட்டுள்ள உள்நாட்டுப் போரால் நாள்தோறும் நூற்றுக்கணக்கான மக்கள் உயிரிழந்து வருகின்றனர்.

தலைநகர் மொன்ரோவியாவில் மட்டும் கடந்த 08 நாட்களில் நடந்த கலவரங்களில் 1000 பேர் உயிரிழந்துள்ளனர்.

தீவிரவாதிகளை ஒடுக்க அரசுப்படைகள் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றபோதும் அங்கு பொது மக்கள் உயிரிழப்பது என்பது அன்றாட நிகழ்வாகிவிட்டது.

இந்நிலையில், லைபீரியாவின் சுதந்திர தினம் சனாதிபதி டெயிலர் தலைமையில் கோலகலமாகக் கொண்டாடப்பட்டது.

விழாவில் மக்களிடையே பேசிய டெயிலர், நாட்டில் நிலவி வரும் உள்நாட்டுப் போரை முடிவிற்குக் கொண்டு வரும் பொருட்டு தாம் பதவி விலக முடிவு செய்துள்ளதாகக் கூறியுள்ளார்.

இனி பொதுமக்கள் உயிரிழப்பதைத் தம்மால் பொறுத்துக்கொள்ள முடியாது என்று கூறிய அவர், தாம் பதவி விலகும் திகதியை மட்டும் அறிவிக்கவில்லை.

# அருணாசலப் பிரதேச ஆளும் காங்கிரஸ் பெரும்பான்மை பலத்தை இழந்தது!

## - பிரிந்து சென்றோர் ஆட்சியமைக்கக் கோரல்

(புதுடில்லி)

இந்தியாவின் அருணாசலப் பிரதேசத்தில் ஆளும் காங்கிரஸ் கட்சியில் பிளவு ஏற்பட்டதையடுத்து அம்மாநில அரசு பெரும்பான்மையை இழந்துள்ளது.

மாநிலத்தில் காங்கிரஸ் கட்சியின் 58 சட்டப்பேரவை உறுப்பினர்களின் 17 அமைச்சர்கள் உட்பட 31 எம்.எல்.ஏக்கள் கட்சியில் இருந்து விலகியதையடுத்து, முதலமைச்சர் முகமத் முக்தி தலைமையிலான அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகிய சட்டப்பேரவை உறுப்பினர்கள் காங்கிரஸ் பீ எனும் பெயரில் புதிய கட்சியைத் தொடக்கியதுடன் முன்னாள் முதலமைச்சர் ஜிகாங் அபங் தலைமையில் ஐக்கிய சனநாயக முன்னணி ஒன்றை அமைத்துள்ளனர்.

இதனையடுத்து ஜிகாங் அபங் நேற்று முன்தினம் இரவு மாநில ஆளுநர் வி.சி. பாண்டேயைச் சந்தித்துப் புதிய அரசு அமைக்க உரிமை கோரியுள்ளார்.

60 பேரைக் கொண்ட சட்டப்பேரவையில் தமது அணிக்கு 04 சுயேட்சை உறுப்பினர்கள் உட்பட 35 பேரின் ஆதரவு உள்ளதாகக் கூறிய அவர், ஆதரவு உறுப்பினர்களின் பட்டியலையும் ஆளுநரிடம் அளித்துள்ளார்.

இதனையடுத்து ஆளுநர் இந்தப் பிரச்சினை தொடர்பாக முடிவு எடுப்பார் என்று தெரிய வருகின்றது.

# பொடோவை ஆராயும் மத்திய குழுவின் அதிகார வரம்பை நிர்ணயம் செய்க

## - தமிழக அரசு பரிந்துரை

(சென்னை)

பொடோ சட்டத்தின் செயலாக்கம் குறித்து ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள மத்திய குழுவின் அதிகார வரம்புகள் நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று தமிழக அரசு கூறியுள்ளது.

தமிழ் நாட்டில் இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பாக இந்தக் குழு பிறப்பித்திருந்த நோட்டிசுக்கு அளித்துள்ள பதிலில் தமிழக அரசு இவ்வாறு கூறியுள்ளது.

தமிழக அரசு பொடோ சட்டம் தொடர்பாக ஏற்கனவே மாநில ஆய்வுக்குழு ஒன்றை அமைத்துள்ளதாகவும், எனவே கைது குறித்த விபரங்களை மத்திய குழுவிற்கு அளிக்கத் தேவையில்லை என்றும் அது கூறியுள்ளது.

இந்தத் தகவலை மத்திய ஆய்வுக்குழுத் தலைவர் நீதிபதி ஆர்.வி. ஷாகாரியா ஆங்கில நாளிதழுக்கு அளித்த பேட்டியின் போது கூறியுள்ளார்.

மத்திய குழுவின் அதிகார வரம்பு குறித்து மாநில அரசுக்கு விளக்க வேண்டிய அவசியமில்லை என்றும் தேவைப்பட்டால் பொடோ கைதுகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்குச் சென்று விசாரணை நடத்தப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.



இந்தியாவின் போபால் நகரில் வெள்ளத்தினூடாக மோட்டார் சைக்கிளொன்றை உருட்டிச் செல்லும் நபர்.

# கட்டாய இராணுவப் பயிற்சியில்லை

(புதுடில்லி)

இளைஞர்களுக்கு கட்டாய இராணுவப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஏதுமில்லை என்று இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் நடந்த விவாதத்தின் போது, நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்த, தேசிய மாணவர் படை, சாரணர் படையை ஒருங்கிணைப்பதுடன் இளைஞர்களுக்கு கட்டாய இராணுவப் பயிற்சியளிக்கப்படுமா? என வினா எழுப்பப்பட்ட போது,

இதற்குப் பாதுகாப்பு அமைச்சர், எழுத்து பூர்வமாக அளித்த பதிலில், இது போன்ற திட்டம் ஏதுமில்லை என்று கூறியுள்ளார்.

# சிறிலங்கா அரச படையினரை அமைதி காக்கும் படையாக மாற்ற பிரிட்டிஷ் இராணுவ நிபுணர் குழு பரிந்துரை!

**இலங்கையில் மற்றொரு போரை எதிர்க்கொள்ளும் ஆற்றல் படையினருக்கு இல்லாததால் அவர்கள் தங்களை அமைதி காக்கும் படையாக மாற்றிக்கொள்ள வேண்டுமென பிரிட்டிஷ் இராணுவ நிபுணர் குழு தெரிவித்துள்ளது.**

முன்னாள் பிரிட்டிஷ் சிரேஷ்ட தளபதி மேஜர் ஜெனரல் அங்கஸ் மொறிஸ் தலைமையிலான இந்த நிபுணர் குழு அண்மையில் சிறிலங்கா வந்து வடக்கு-கிழக்கு பகுதிகள் உட்பட பல்வேறு பகுதிகளுக்கும் சென்று நிலைமைகளை ஆராய்ந்த பின்னர், சிரேஷ்ட இராணுவத் தளபதிகளைச் சந்தித்து தங்கள் அவதானிப்புக்கள் மற்றும ஆய்வுகள் தொடர்பாக கலந்துரையாடியது.

நாட்டில் மீண்டுமொரு யுத்தம் வெடித்தால் பிரதான நகரங்களை தாக்கி தங்களின் கட்டுப்பாட்டினுள் கொண்டுவந்து விடும் ஆற்றலை விடுதலைப் புலிகள் பெற்றுள்ள அதேநேரம் புலிகளின் தாக்குதலை முறியடித்து அவர்களை வெற்றிகொள்ள முடியாத நிலையிலேயே படையினர் உள்ளனர்.

இதனால், சிறிலங்கா மீண்டுமொரு போருக்குச் செல்வதைத் தவிர்த்து சமாதானத்தைப் பேணிக் காப்பதில் ஈடுபட வேண்டும் எனச் சுட்டிக்காட்டிய அவர்கள் ஐநா. அமைதிப்படையின் சிறிலங்காப் படையினரை அங்கம் வகிக்கச் செய்வதன் மூலம் அந்நியச் செலாவணியைப் பெருமளவில் ஈட்டிக்கொள்ள முடியுமெனவும் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், நாட்டின் தற்போதைய நிச்சயமற்ற நிலையில் சிறிலங்காப் படையினரை உலகெங்கும் அமைதி காக்கும் பணிக்கு அனுப்பும் நிலையில் தாங்கள் இல்லையென படைத் தளபதிகள் தெரிவித்துள்ளனர்.

## கொழும்பில் மாநாடு

(கொழும்பு)

உணவு விவசாய ஸ்தாபனத்தின் தேயிலை சம்பந்தமான பதினெட்டாவது மாநாடு கொழும்பில் அடுத்த மாதம் ஆரம்பமாகும்.

ஒகஸ்ட் மாதம் 18ஆம் திகதி ஆரம்பிக்கும் இக்கூட்டம் மூன்று நாட்களுக்கு நடைபெறும். தேயிலை உற்பத்தி மற்றும் தேயிலைப் பாவனை என்பவற்றில் ஈடுபட்டுள்ள நாடுகளைச் சேர்ந்த 75 நிபுணர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொள்வார்கள். தேயிலை உற்பத்தி சம்பந்தமான கொள்கைகள் பற்றியும் உலக தேயிலைத் தொழில் சம்பந்தமாகவும் இவர்கள் ஆராய்வார்கள்.

## நிர்வாகம் தெரிவு

(பூநகரி)

பூநகரி சாமிப்புலம் கிராமத்தில் 13.3.2003 ஆரம்பித்து வைக்கப்பட்ட தியாகதீபம் மருத்துவமனையின் புதிய நிர்வாகத் தெரிவுக் கூட்டம் அண்மையில் தலைவர் அ.ஐயம்பிள்ளை தலைமையில் இடம்பெற்றது. தலைமையுரையைத் தொடர்ந்து புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. தெரிவின்போது மீண்டும் அ.ஐயம்பிள்ளை தலைவராகவும், உபதலைவராக பூநகரி தபால் அதிபர் ச.சடாச்சரம் செயலாளராக பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க பொது முகாமையாளர் ந.பாலசுப்பிரமணியமும் உபசெயலாளராக ச.குணரத்தினமும் மற்றும் நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (34)

## வெள்ளத்தால் சேதமுற்ற நூலகங்கள் புனரமைப்பு

(கொழும்பு)

வெள்ள அனர்த்தங்களால் சேதமாக்கப்பட்ட பாடசாலை நூல் நிலையங்களின் தகவல்களை வழங்குமாறு அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தேசிய நூல்க சேவைக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

சேதமடைந்த நூல் நிலையங் களை புனரமைக்கும் படியும் அவர் ஆலோசனை விடுத்துள்ளார். தேசிய நூலக சேவையின் தலைவர் தகவல் தருகையில், சேதமடைந்த இந்த நூல் நிலையங்கள் சம்பந்தமாக தகவல்களைத் திரட்டவென ஏற்கனவே கேள்விக்கொத்து ஒன்று அனுப்பப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார். சகலவித தகவல்களும் திரட்டப்பட்ட பின்னர் புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

# 1995-2001 காலப் பகுதி யுத்தத்தில் 10 ஆயிரத்திற்கு மேலான படையினர் பலி!

## சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சர் தகவல்

கடந்த 1995 ஆம் ஆண்டு தொடக்கம் 2001ஆம் ஆண்டு வரையான யுத்தத்தின்போது முப்படைகளையும் சேர்ந்த பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட படையினர் உயிரிழந்துள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

அத்துடன் இக்காலப் பகுதியினுள் சுமார் 3000 படையினர் காணாமற்போயுள்ளனர் எனவும் 28 ஆயிரத்து 500 படையினர் அங்கவீனர்களாகியிருக்கின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விபரங்களை நாடாளுமன்றத்தில் வெளியிட்டுள்ளார் அமைச்சர் மாரப்பன.

யுத்தம் தீவிரமாக நடைபெற்ற காலப் பகுதியில் கடந்த அரசாங்கம் உயிரிழந்த மற்றும் காணாமற்போன படையினரின் எண்ணிக்கையை இருட்டடிப்புச் செய்து வந்துள்ளது எனவும் குறறும் சாட்டியுள்ளார்.

## பொலிஸ் திணைக்களத்தில் 12000 வெற்றிடங்கள்; குற்றச் செயல்களைத் தடுக்க முடியாதுள்ளது

### - பொலிஸ் உயர் அதிகாரி தகவல்

(கொழும்பு)

சிறிலங்கா பொலிஸ் திணைக்களத்தில் பன்னிரெண்டாயிரம் பொலிசாருக்கு வெற்றிடங்கள் நிலவுவதாக அறிவிக்கப்படுகிறது. பொலிஸ் திணைக்களத்தின் அன்றாட செயற்பாடுகள் இதன் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளது என பொலிஸ் தலைமையக உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். நாட்டில் தினந்தோறும் குற்றச்செயல்கள் அதிகரித்து வருகின்றன. இத்தகைய குற்றச்செயல்களைத் தடுப்பதற்கு பொலிஸ் அதிகாரிகள் பற்றாக்குறை முக்கிய தடையாகவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். சிறிலங்கா பொலிஸ் திணைக்களத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள்களுக்கான வெற்றிடங்களே அதிகமாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இடைக்கால நிர்வாகம் தொடர்பாகப்பேச பிரதமரின் அழைப்பிற்கு சனாதிபதி பின்னடிப்பு

(கொழும்பு)

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக சிறிலங்கா அரசாங்கத்துடன் பேசுவதற்கு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பின்னடித்து வருகின்றார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இடைக்கால நிர்வாக திட்ட வரைவு தொடர்பாக சனாதிபதிக்கும் பொதுசன ஐக்கிய முன்னணிக்கும் ஏற்பட்டுள்ள சந்தேகங்களைத் தீர்க்கும் முயற்சியாக சனாதிபதியை நேரடியாகச் சந்தித்து விளக்கமளிக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இவ்வாரத்தில் சனாதிபதிக்கு அதிக வேலைகள் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த வாரம் இந்தச் சந்திப்பு இடம்பெறுமா என்பது குறித்தும் எவ்வித தகவல்களும் வெளியாகவில்லை.

விடுதலைப்புலிகளுக்கு இடைக்கால நிர்வாக திட்டவரைவு அனுப்பப் பட்டதில் சனாதிபதியின் யோசனைகள் புறக்கணிக்கப்பட்டிருப்பதால் இது குறித்து சனாதிபதி கோபமடைந்திருப்பதாகவும் அரசாங்கம் இடைக்கால திட்ட வரைவு குறித்து மேற்கொள்ளும் நடவடிக்கையில் சனாதிபதி பெரும் அதிருப்தி கொண்டிருப்பதாகவும் சனாதிபதியின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

## டிஜிற்றல் கடவுச்சீட்டு முறை சிறிலங்காவில் அறிமுகம்

(கொழும்பு)

டிஜிற்றல் கடவுச் சீட்டு விநியோகம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. நேற்று முன்தினம் மாலை நிகழ்வொன்றின்போது வைபவ ரீதியாக இது வெளியிட்டு வைக்கப்பட்டது. அங்கு சமுகமளித்திருந்த அமைச்சர் ஜோன் அமரதுங்க கருத்து வெளியிடுகையில் சர்வதேச தரத்திற்கு அமைய புதிய கடவுச் சீட்டு தயாரிக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

அவர் தொடர்ந்து கருத்து வெளிடுகையில், கடவுச் சீட்டு தொடர்பாக மேற்கொள்ளப்படும் சட்டவிரோத நடவடிக்கைகள், சட்டவிரோத குடியமர்வு மற்றும் வெளிநாடுகளுக்கு ஆட்களைக் கடத்துதல் உட்பட பலதரப்பட்ட நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் எனக் கூறினார்.

## காஸ் சிலிண்டர் வெடித்து குடும்பப் பெண் மரணம்!

(யாழ்ப்பாணம்)

யாழப்பாணம் நாவலர் வீதியில் சிலிண்டர் வெடித்ததில் குடும்பப் பெண்ணொருவர் பரிதாபகரமாக மரணமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் பகல் 2.00 மணியளவில் புதிதாக வாங்கிய சிலிண்டர் முதல் தடவை பற்ற வைக்கப்பட்டபோது அது செயற்படவில்லை என்றும் இறந்தவரின் எட்டு மாதக் குழந்தை அழுத காரணத்தினால் குழந்தையை பார்த்து விட்டு பின்னர் வந்து மேற்படி சிலிண்டரைத் திரும்பவும் பற்ற வைத்தபோது அது வெடித்து பற்றியபோது வ. நிருஷா (வயது - 18) இவருடைய கணவர் வசீகரன் (வயது -23) இருவரும் படு காயமடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு நேற்றுக் காலை மேற்படி பெண் பரிதாபகரமாக மரணமடைந்துள்ளார். (33)

## பொதுக்கிணறுகள் கையளிப்பு

கரைதுறைப்பற்று பிரதேசசபையினரால் 2002ஆம் ஆண்டின் திட்டத்தில் கிணறு கட்டும் வேலைகள் நடைபெற்றன. அதில் சிலாவத்தை சந்தி, சிலாவத்தை மாதிரிக் கிராமம் ஆகிய இரு கிணறுகளின் வேலைகள் பூர்த்தி அடைந்த நிலையில் கடந்த வியாழனன்று அப்பகுதி கிராம சேவையாளரானசெல்வி.எஸ்.சுமதியிடம் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டது. (20)

## மாதர் சங்கங்கள் தெரிவு

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பிரதேசத்தின் கிராம ரீதியாக மாதர்சங்கங்கள் தெரிவு செய்யப்பட்டு வருகின்றது. சின்னசாளம்பன் கிராமத்தின் கிராம சேவகர் தமிழ்ச்செல்வன் தலைமையிலும், கற்சிலைமடு கிராமத்தின் கிராம சேவகர் ஆனந்தராசா தலைமையிலும் மாதர் சங்கங்களின் உறுப்பினர்கள் அண்மையில் தெரிவு செய்யப்பட்டனர். இதில் ஒவ்வொன்றிலும் 15 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழனன்று கிராம சேவகர் ஆனந்தராசா தலைமையில் கற்சிலைமடு 3ஆம் கண்டம் கிராமத்திலும் கிராம சேவகர் தமிழ்ச்செல்வன் தலைமையில் புதுக்குளம் சிவநகர் கிராமத்தில் தெரிவுகள் நடைபெற்றன. (05)

## ஏக்கருக்கு 200 புசல் விளைச்சல் புதிய நெல்லினம் அறிமுகம்

ஏக்கருக்கு 200 புசல் விளைச்சலைத் தரக்கூடிய புதியரக நெல்லினை வத்தளகொட நெல் ஆராய்ச்சி நிலையம் அறிமுகம் செய்துள்ளது. பு.ஜி-96.74 என்ற இந்த புதியரக நெல் உச்சக் கட்ட விளைச்சலைத் தருவதுடன் உவர் நிலம் மற்றும் பெருவெள்ளம் என்பவற்றுக்கும் ஈடுகொடுக்கக் கூடியது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறுபோகம், பெரும்போகம் ஆகிய இரண்டு போகங்களுக்கும் இந்த வகை நெல்லைப் பயிரிட முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கால்நடை அபிவிருத்தி நடவடிக்கைக்காக கிளிநொச்சியில் இடம்பெயர் சேவை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் கால் நடை வளர்ப்போரின் நன்மை கருதி த.பொ.மே.நிறுவனமும் கால்நடைஉற்பத்தி சுகாதார திணைக்களமும் இணைந்து 23.07.2003 தொடக்கம் 19.08.2003 ஆம் திகதி வரையான காலப்பகுதிவரை கால்நடைகளை அபிவிருத்தி செய்யும் வகையில் சேவையினை ஆரம்பித்து நடாத்தி வருகின்றனர்.

இதன் ஓர் கட்டமாக கண்டாவளைப் பிரதேசத்தில் புன்னைநீராவி, குமாரசாமிபுரம் கிராமங்களில் கால் நடைகளுக்கு ஏற்படும் தொண்டை அடைப்பான் நோய், தடுபூசி ஏற்றல், காளை மாடுகள், நாய்களுக்கு நலம் அடித்தல் சினைப்பரிசோதனை வைத்திய சேவைகள் என்பன நடைபெற்றது.

மேலும் இடம்பெயர் சேவையில் கால்நடை சேவைகள் சினைப்படுத்தப்பட்டதை உறுதிப்படுத்தல், செயற்கை முறை சினைப்படுத்தல், தடுப்பூசி ஏற்றல், பயிற்சி வகுப்புக்கள் ஆகிய சேவைகளும் தொடர்ந்து கிராமம் கிராமமாக நடைபெறவுள்ளதாக சகல கால்நடை உரிமையாளர்களுக்கும் பிரதேச தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் அறிவித்துள்ளார். (14)

# கணினிகளில் உயிரளவைத் தொழில்நுட்பம்

## அறிவியல் உலகம்



பெருவிரல் ரேகை கணினி மூலம் ஒப்பிடப்படுகிறது.

பிரித்தானிய அரசாங்கம் தனது நாட்டுக்கு அனுமதி வழங்கும் **(VISA)** முறையில் புதிய நடைமுறைகளைக் கொண்டு வந்துள்ளதாக செய்திகள் மூலம் அறிகின்றோம். இவ்வளவு காலமும் ஒருவரை அடையாளம் காண புகைப்படமும் கையொப்பமும் இணைந்த கடவுச்சீட்டுக்கள் பயன்படுத்தப்பட்டு வந்தன. இப்போது அவைபோதாதென கைவிரல் அடையாளம், குருதிவகை என்பனவும் பெறப்படப்போவதாக இப்பொழுது தகவல்கள் வெளிவருகின்றன. முன்னர் குற்றவாளிகளை அடையாளம் காணவே பெரும்பாலும் விரலடையாளங்கள் பயன்பட்டன. பின்னர் வேறும் பல விடயங்களில் மாறக்கூடிய கையொப்பங்களை விட மாற்றமடையாத விரலடையாளங்கள் பயன்பட்டன. பின்னர் வேறும் பல விடயங்களில் மாறக்கூடிய கையொப்பங்களை விட மாற்றமடையதாக விரலடையாளங்கள் நீண்ட காலத்தின் பின்பும் ஒருவரை அடையாளம் காணப்பயன்பட்டு வருகின்றன.

இப்பொழுது கைரேகைகள் மட்டுமல்ல கருவிழிப்படலம், குரல், முகவடிவமைப்பு என்பனவும் கணினியின் உதவியுடன் ஒப்பிடப்பட்டு ஒருவரை அடையாளம் காணப்பயன்படுத்தப்படுகின்றன. இதனைத் தமிழில் "உயிரளவை" என்று அழைக்கின்றனர். ஆங்கிலத்தில் **Biometric** என அழைக்கப்படுகிறது. இது நவீன கணினித்தொழில் நுட்பத்தின் உதவியுடன் அன்றாட தேவைகளுக்குக்கூடப் பயன்படுத்துதல் சாத்தியமாகியுள்ளது.

உயிரளவையில் பின்வரும் விடயங்கள் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றன.

1. பெருவிரல் கைரேகை
2. கண் கருவிழி
3. முகஅமைப்பு
4. குரல் ஒலி
5. கையெழுத்து

என்பனவற்றை ஒப்பிட்டுப்பார்த்து ஒருவரை அடையாளம் காணலாம் என முன்னரே பார்த்தோம். இவற்றில் கையெழுத்தே இப்பொழுது பெரும்பாலும் மனிதப் பயன்பாட்டில் ஒப்பிடும் ஒரு முறையாக உள்ளது. அதாவது அறிமுகமான ஒருவர் எமக்கு கடிதம் அல்லது விண்ணப்பம் எழுதினால் அல்லது காசோலையில் கையொப்பமிட்டு அனுப்பினால் நாம் அதனை இனம் கண்டு உறுதிப்படுத்திக்கொள்கின்றோம். எனினும் பல ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்களைக் கொண்ட வங்கி போன்ற நிறுவனங்களில் இவற்றை கணினியின் உதவியுடன் ஒப்பிடுகின்ற முறை தற்போது உள்ளது.

கணினிகளில் சில கோப்புகளிலுள்ள விடயங்களைப் பார்வையிட அனைவரும் அனுமதிக்கப்படுவதில்லை. உதாரணமாக பெரிய நிறுவனங்களின் நிதிநிலை அறிக்கைகள், கேள்விகோரல்களுக்கான விண்ணப்பங்கள், அந்தரங்கக்கடிதங்கள் என்பன கணினி மூலம் தயாரிக்கப்படும் போது அவற்றை வலையமைப்பைப் பயன்படுத்தி பலரும் பார்த்துவிட வாய்ப்புள்ளது. இதனைத் தடுக்க கடவுச் சொல் **(Pass-word)** பயன்படுத்தப்படுகிறது. எனினும் இது எவருக்காவது தெரிந்துவிட்டால் அவர் இந்த இரகசிய விடயங்களை அறிந்துகொள்ள முடியும். சிலவேளைகளில் கடவுச் சொல்லை சம்பந்தப்பட்டோரே மறந்து விட்டால் பலசிரமங்களை அனுபவிக்க வேண்டிவரும். ஆனால் உயிரளவையில் இப்பிரச்சினை இல்லை. குறிப்பிட்ட சிலரின் மேலே குறிப்பிட்ட ஐந்து விடயங்களில் ஏதாவது ஒன்றைக் கணினியில் பதிவு செய்து வைத்தால் அவர் மட்டும் குறிப்பிட்ட கோப்புக்களைப் பார்வையிட கணினி அனுமதிக்கும். கைரேகை, முகஅமைப்பு, குரல், கண்கருவிழி என்பன ஆளுக்கு ஆள் மாறுபடுவதால் இவ்வகை உயிரளவைகளை ஒப்பிடும் கருவிகளை எளிதில் ஏமாற்றிவிட முடியாது. உயிரளவைத் தொழில்நுட்பத்தை **(Biometric Te chnology)** பல்வேறு விடயங்க ளுக்கு பயன்படுத்தலாம். அன்றாடச் செயற்பாடுகளில் கூட இதனைப் பயன்படுத்த முடியும்.



கையெழுத்தை ஒப்பிடும் கருவி.

உதாரணமாக

1.அலுவலகங்களில் நேரம் வருகையைப் பதிவு செய்யப் பயன்படுத்தலாம். குறிப்பிட்ட ஊழியர் ஒருவர் கருவியில் கை வைத்ததும் அவர் வருகை தந்த நேரம் கணினியால் பதிவுசெய்யப்படும்.

2. வங்கிகளில் தானியங்கி இயந்திரம் மூலம் பணம் மீளப்பெற வைப்பிலிட அனுமதிக்க.

3. வாகன இயக்கத்தை ஆரம்பிக்க, நாம் வழமையாகப் பாவிக்கும் சாவிக்குப்பதிலாக.

4. பணப்பெட்டிகள், பாதுகாப்பு அறைகள், வீட்டு வாயிற்கதவு என்பவற்றைத்திறக்க.

5. தொலைபேசி, கையடக்கத்தொலைபேசிகள் என்பவற்றை குறிப்பிட்டவர்கள் மட்டும் பயன்படுத்த.

என சாதாரண பாவனைகளுக்கு உயிரளவை தொழில் நுட்பத்தைப் பயன்படுத்த முடியும்.

இதேவேளை

1 கைதிகளை இனம்காண

2 சந்தேகத்துக்கிடமானோரைக் கண்காணிக்க

3 நாட்டின் எல்லையைக் கடக்க அனுமதி வழங்க

என்பன போன்ற விடயங்களுக்கு உயிரளவைத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தலாம்.

இன்று இணையம் மூலம் நடைபெறும் வணிகம் கோடிக்கணக்கான டொலர்கள் பெறுமதிவாய்ந்தவை. சாதாரணமாக கடவுச் சொற்களைப் **(Pass word)** பயன்படுத்தியே இங்கு பணப்பரிமாற்றம் மேற்கொள்ளப்படுகிறது. கடவுச் சொற்கள் திருடப்படுதல் (அதாவது ஒருவரின் கடவுச் சொல்லை வேறொருவர் அறிந்துகொண்டால் பெரும் மோசடிகளை மேற்கொள்ள அது வழிவகுத்துவிடும்.) கடவுச்சொல்லை மறந்துவிடுவதும் இவ்வாறான பல சிக்கல்களை உருவாக்கும். ஆனால் உயிரளவை தொழில் நுட்பம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்கிறது. இதன்மூலம் ஏமாற்றி மோசடிசெய்து ஈ-வணிகத்தில் ஈடுபடமுடியாது.



கைரேகை அடையாளம்

இவ்வாறு கூறப்பட்டாலும் உயிரளவைத் தொழில்நுட்பத்தில் திருத்தமானதும் ஏமாற்ற முடியாததுமான முறை கைரேகை முறையே.

இம்முறையில் கைரேகை, கையொப்பம், குரல், கருவிழி அமைப்பு முகஅமைப்பு என்பன உரிய கருவிகள் மூலம் பதிவு செய்யப்பட்டு கணினியில் சேமித்து வைக்கப்படும். அவை பின்னர் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டே உரியவர் அடையாளம் காணப்படுகிறார். பொதுவாக "கருவிழி" முறை பயன்படுத்தப்படாத நிலையில் ஏனைய மூன்று முறைகளிலும் ஏமாற்றவே முடியாது எனக்கூறிவிடுவதற்கில்லை. முக அமைப்பு, கையொப்பம் என்பனவற்றில் அதேபோன்ற முக அமைப்பு உடைய ஒருவராலோ அல்லது அதே போன்ற கையொப்பமிடத் தெரிந்த ஒருவராலோ ஏமாற்றிவிட முடியும். மிகமிக நவீனமான பகுத்தாய்வு செய்யக் கூடிய கணினிகளாலேயே இவ்வாறான வேறுபாடு களை இனங்காணக் கூடும். ஆனால் அவ்வாறானவற்றை அன்றாடம் பாவனைக்குப் பயன்படுத்த முடியாது.



கருவிழி

குரல் மூலம் இனம்காணும் முறையில் பல்குரலில் பேசக்கூடிய ஒருவரால் கணினியை ஏமாற்ற முடியும் என நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அதேவேளை குரலை ஒப்பிடும்போது உரியவரின் குரல் நோய், தொண்டைவலி, தடிமன் போன்ற வற்றால் மாறியிருப்பின் உண்மையான குரலுக்கு உரியவரே சிரமப்படவேண்டி நேரிடும்.

ஆனால் கைரேகைமுறையே மிகவும் திருத்தமானதும் நம்பகரமானதும் இலகுவானதாகவும் இருப்பதால் அதுவே பொதுவாக அடையாளம் காணப்பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**சி.சிவபாலன்**

# சிறிலங்காப் படையினர் கெடுபிடிகள் சுண்டிக்குளிச் சந்தியில் அதிகரிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ் சுண்டிக்குளிச் சந்தியில் இராணுவத்தினரின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளது.

சுண்டிக்குளி பாடசாலை சந்தியூடாக பயணம் செய்யும் மக்கள் இராணுவத்தினரால் வழங்கப்பட்ட விசேட அடையாள அட்டைகளை பயன்படுத்த வேண்டும் என இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

512வது இராணுவ படைப்பிரிவினர் உழவு இயந்திரங்களில் குழுக் குழுவாக வந்திறங்கி வீதியால் செல்லும் மக்களை வழிமறித்து விசேட அடையாள அட்டையைப் பரிசோதனை செய்வதோடு அவ்வாறு விசேட அடையாள அட்டை இல்லாதவர்களை நீண்ட நேரம் விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (33)

# இருபது வருடங்களில் அடைந்த நஷ்டங்களுக்கு இழப்பீடும் நிவாரண உதவியும் வழங்குக

## - யாழ்.வர்த்தக சம்மேளனம் வேண்டுகை

(கொழும்பு)

கடந்த இருபது வருடங்களில் யாழ்ப்பாண வர்த்தகர்கள் அடைந்த நஷ்டங்களுக்கு நஷ்ட ஈடுகளும் அவசர நிவாரண உதவிகளும் வழங்கப்படவேண்டுமென்றும் யாழ் வர்த்தக சம்மேளனம் வேண்கோள் விடுத்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிற்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளனர். சம்மேளனத்தின் பிரதிநிதியொருவர் கருத்து வெளியிடுகையில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வர்த்தக சமூகத்தினருக்கு நிவாரணம் அல்லது இலகுகடன் வழங்கப்பட வேண்டுமென்பது தமது கோரிக்கையாகுமென்று அவர் குறிப்பிட்டார். 1995ஆம் ஆண்டில் யாழ்ப்பாண இடம் பெயர்வின் போது தங்கள் இழந்த சொத்துக்களுக்கு இதுவரை நஷ்டஈடு வழங்கப்படவில்லை எனவும் சம்மேளனத்தின் 69 அங்கத்தவர்கள் அடைந்த நஷ்டம் பதினொரு கோடி எழுபது இலட்சம் ரூபாவிற்கும் அதிகம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மூன்று சரக்குக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டதன் காரணமாக இழந்த பொருளுக்கும் நஷ்டஈடு கோரப்பட்டுள்ளது.

சரக்குக்கப்பல்களான அஸ்ரோபா, றின்பஸ்காஸ், உகனை ஆகியன மூழ்கடிக்கப்பட்ட சமயம் அந்தக் கப்பல்களில் நாற்பத்தி மூன்று கோடியே முப்பது இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் இருந்ததாகவும் சம்மேளனம் அறிவித்துள்ளது.

# பாவனைக்கு உதவாத மா யாழ். குடாநாட்டில் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கூட்டுறவு சங்கங்களுக்கு அனுப்பப்படும் கோதுமை மா தரம் குன்றியதாக இருக்கின்றது என தெரியவருகிறது.

இவ்வாறு அனுப்பப்படும் மா சுவை, நிறம் என்பவற்றில் வித்தியாசங்களை உணரக்கூடியதாகவுள்ளதால் அவை பாவனைக்கு உதவாதவை என உணர்ந்தும் அதனை பாவிக்கவேண்டிய நிலையில் மக்கள் இருக்கின்றனர்.

இதுவரை காலமும் திருகோணமலையிலிருந்து நேரடியாக யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்ட மா தற்போது வவுனியாவில் களஞ்சியப்படுத்தப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்திற்கும் அனுப்பப்படுவதால் இவ்வாறு ஏற்படலாம் என ப.நோ.கூ. சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (33)

# அரசதுறையை புனரமைக்க உலக வங்கி நிதியுதவி

(கொழும்பு)

நாட்டின் அரச துறையை புனரமைப்பதற்கென உலக வங்கி அறுபது இலட்சம் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.

பொது நிர்வாக அமைச்சர் வஜிர அபயவர்த்தன தகவல் தருகையில் அரச துறை ஊழியர்களுக்கு பயிற்சியளிப்பதில் பத்து இலட்சம் அமெரிக்க டொலர்கள் செலவிடப்படுமென்று அவர் குறிப்பிட்டார். அதே சமயத்தில் ஊழியர்களுக்கும் பொதுமக்களுக்குமான விழிப்புணர்வுத் திட்டம் ஒன்றும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அனுராதபுரத்தில் நடைபெற்ற பொது நிர்வாக அமைச்சின் நடமாடும் சேவையில் பங்கு பற்றி அவர் உரை நிகழ்த்தினார். அரச துறையின் முழு அளவிலான புனரமைப்பிற்கு உலக வங்கி பத்தொன்பது கோடி எண்பது இலட்சம் டொலர்களை வழங்கவுள்ளது. இத்தகைய புனரமைப்பு நடவடிக்கைகள் மூலம் புதிய பல விடயங்களையும் நடவடிக்கைகளையும் அரச ஊழியர்கள் அறிந்து கொள்ள முடியுமென்றும் அவர் கருத்து வெளியிட்டார்.

# தபால் பெட்டிகள் இன்மையால் யாழ். மாவட்ட மக்கள் அவதி!

## – பொறுப்பற்ற விதத்தில் தபால் அதிகாரிகளின் பதில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணமெங்கிலும் காணப் பட்ட தபால் பெட்டிகள் சூரியகதிர் இராணுவ நடவடிக்கையின் பின்னர் காணாமற்போயுள்ளதால் மக்கள் தினமும் கஷ்டப்பட்டு வருகின்றனர்.

சில தபால் பெட்டிகளில் இடும் தபால்கள் குறிப்பிடப்பட்ட இடங்க ளுக்குச் சென்று சேர்வதில்லை. இத னால் மக்கள் கடிதங்களை அஞ்சல் செய்ய தபாலகங்களுக்குச் சென்று தபாலிட வேண்டிய நிலை ஏற் பட்டுள்ளது. ஏனெனில் பாவனை யில் இல்லாத தபால் பெட்டிகளில் சில வேளைகளில் போடப்படும் தபால்கள் இத்தபால் பெட்டிகளில் குறியீடுகள் இல்லாமையால் அப் பெட்டிகளில் இடும் தபால்கள் உரிய இடத்திற்குச் சென்று சேராமையால் மக்கள் தினமும் தபால் எடுக்கப்படு கின்ற தபால் பெட்டிகளில் கூட கடி தங்களை இடுவதற்கு அஞ்சி தபால் நிலையங்களுக்கு கொண்டு செல்ல வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக தபால் அலுவ லக அதிகாரியுடன் தொடர்பு கொண்ட போது தற்போதுள்ள தொலைபேசித் தொடர்பைக் காரண மாகக் கூறி அஞ்சல்பெட்டி தற்போ தைய சூழ்நிலையில் அவசியம் இல்லையென தபால் அலுவலக அதிகாரிகள் குறிப்பிடுவது மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் தபால் அதிகாரியுடனும் தபால் அலுவலக அதிகாரியுடனும் மக்களுக்கு தின மும் முரண்பாடுகளும், முறுகல் நிலை யும் ஏற்படுவது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் தபால் பெட்டியை நம்பி தபால்களை அஞ்சல் செய்ய அச்சப்படுகின்றமை கவலைக்குரிய ஓர் விடயமாகும். (33)

# மூன்று முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு நிகழ்வுகள்

(உடையார்கட்டு)

வள்ளிபுனம் வலயத்தின் கைவே லிப் பாடசாலையில் பெற்றாரும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும் இணைந்து மதி.ராஜ்.காந்தன் ஆகிய மூன்று முன்பள்ளிகளின் வருடாந்த விளையாட்டு விழாவை மிகச் சிறப் பாக மேற்படி நிறுவன இணைப்பா ளர் தலைமையில் கடந்த சனிக் கிழமை பி.ப.நடைபெற்றது.

நிகழ்வில் மங்கல விளக்கினை கைவேலி ஊரக தே.எ.பேரவை செயலாளர் மாதவராசாவும், சமூக பொருளாதார வளர்ச்சி வங்கிக் கணக்காளர் பத்மலோஜினியும் ஏற்றி வைக்க தேசியக்கொடியினை வள்ளி புனம் உடையார்கட்டு வலயப்பொறுப் பாளர் மயூரன் ஏற்றினார்.

முன்பள்ளிச் சிறார்களின் உடற் பயிற்சியும், அவர்களின் திறனை வெளிப்படுத்தும் பல போட்டிகளும் நிகழ்ந்தன. தொடராக பரிசில்கள் மதி.ராஜ், காந்தன் முன்பள்ளி சிறார் களுக்கு வழங்கப்பட்டது. (19)

# கட்டில்லா கிணற்றில் வீழ்ந்து சிறுமி பரிதாப மரணம்!

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி மாயவனூர் பகுதியில் கட்டில்லாத கிணற்றில் தவறி வீழ்ந்து சிறுமி ஒருவர் பரிதாபகரமாக மரணமானார்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் சிவன் கோவிலடி மாயவனூரைச் சேர்ந்த அரியபுத்திரன் சிலோஜினி (வயது 6) என்பவரே மரணமடைந்தவராவார்.

அன்று பிற்பகல் சுமார் ஐந்து மணியளவில் சகோதரனுடன் பால்வாங்க அருகிலுள்ள ஒரு வீட்டிற்குச் சென்றவேளை இவர் கட்டில்லாத கிணற் றுக்குள் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளதாகத் தெரியவருகிறது. (12)

# நிழலாடும் நினைவலைகள்





| லெப். அன்சார் | லெப். புலவர் | லெப். தாமோதரன் (அன்சார்) |
|---|---|---|
| சீவரத்தினம் சிவரூபன் | யோகசாமி செந்தூரன் | சீவரத்தினம் சிறிகாந் |
| முத்தாக 1970-05-09 | முத்தாக 1973-05-05 | முத்தாக 1974-01-09 |
| வீர வித்தாக 1989-07-29 | வீர வித்தாக 1991-03-19 | வீர வித்தாக 1993-03-13 |

(சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி)

வானத்து விண் மீன்கள் ஒளிர்வதைப் போல
எம் நெஞ்சங்களில் உங்கள் நிழல்கள்
ஒளிர்ந்து கொண்டேயிருக்கும்.

161 ½ கட்டை, கண்டி வீதி,
பரந்தன்.

(3583)

திருமதி சீ. சறோஜினி
குடும்பத்தினர்.

# தேசிய எழுச்சிப் பேரவையின் மாதாந்த ஊரக சங்கமம்

வட்டக்கச்சிப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் மாதாந்த ஊரக சங்கம நிகழ்வு நேற்று முன் தினம் மாலை.2.10 மணிக்கு கல்மடு சுதாங்கனி பொதுமண்டபத்தில் நடைபெற்றது.

கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கத் தலைவர் தலைமையில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் பொதுச் சுடரினை காவல்துறை உறுப்பினா தனஞ்செயன் ஏற்றிவைத்தார். தமி ழீழ தேசியக்கொடியினை வட்டக் கச்சிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி வேனினி ஏற்றி வைத்தார். வரவேற்புரையினை வட் டக்கச்சிப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் பொன்னுத் துரையும் கருத்துரைகளை கிளி/ மாவட்ட அரசியல் துறைப்பொறுப் பாளர் முரளியும் போராளி தமிழ்கவி மற்றும் புளியம் பொக்கணை ஆலய குருக்களும் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் தேசிய எழுச்சிப் பேரவையில் நடைமுறைப்படுத்தப் பட வேண்டிய செயற்பாடுகள் பற்றி யும் மாதாந்த அறிக்கைகள் தொடர் பாகவும் கலந்துரையாடப்பட்டது. போராளிகள், வைத்திய அதிகாரி, கூட்டுறவாளர்கள் தேசிய எழுச்சிப் பேரவையினர், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.


C.B.A கல்வி நிலையம்
கதிரேசு வீதி, வவுனியா.
பேராதனைப் பல்கலைக்கழக
வெளிவாரி பட்டப்படிப்புக்கள்
G. A. Q. (முதற்கலைத் தேர்வு)


2003 ஆகஸ்ட் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான
பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு
காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை.
C.B.A. கல்வி நிலையம், கதிரேசு வீதி, வவுனியா.

செயலமர்வு நேர அட்டவணை
காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை

| | | |
|---|---|---|
| 31-07-2003 | வியாழன் | இந்துநாகரிகம் |
| 01-08-2003 | வெள்ளி | புவியியல் |
| 02-08-2003 | சனி | தமிழ் |
| 03-08-2003 | ஞாயிறு | அரசறிவியல் |
| 04-08-2003 | திங்கள் | மெய்யியல் |
| 05-08-2003 | செவ்வாய் | புவியியல் |
| 06-08-2003 | புதன் | பொருளியல் |

C.B.A. கல்வி நிலையம், கதிரேசு வீதி, வவுனியா.

எமது செயலமர்வு விரிவுரையாளர்கள்...

| | |
|---|---|
| தமிழ், இந்துநாகரிகம் | கா.யோ. கிரிதரன் B.A. |
| புவியியல் | S.S. வாசன் B.A. (Hons) |
| மெய்யியல் | S.T. கோடீஸ் |
| அரசறிவியல் | K. ஜெயரட்ணா B.A. (Hons) |
| பொருளியல் | K. கோகுலதாஸ் B.A. (Hons) |

C.B.A. கல்வி நிலையம், கதிரேசு வீதி, வவுனியா.

(சி-8242)

## சிந்தனைக்கு



தமிழ் மக்களாகிய நாம் ஒரு தேசியக் கட்டமைப்பைக் கொண்டவர்கள்: வரலாற்று ரீதியாக நாம்ஒரு தேசியமாகவே வாழ்ந்து வந்தோம்; தேசியமாகவே வாழ்ந்து வருகிறோம்; தேசியமாகவே வாழப்போகிறோம்.

தமிழீழத்தேசியத் தலைவர்

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 29-07-2003

## ஆக்கிரமிப்பை உறுதி செய்ய...!

திருமலை மாவட்டத்தில் நடைபெறவிருந்த காணி அமைச்சின் நடமாடும் சேவை அங்கு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஹர்த்தால் காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அதாவது, திருமலை மாவட்டத்தில் காணிகள் தொடர்பாகக் காணப்படும் சிக்கல்களுக்குத் தீர்வு காணுதல் என்ற ரீதியில் – சிங்களக் குடியேற்றவாசிகளினால் ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் தாயகப் பிரதேசத்தை அவர்களுக்குச் சட்டபூர்வமாக்கும் வகையில் உறுதிப் பத்திரங்களை வழங்க மேற் கொள்ளப்படவிருந்த காணி அமைச்சின் இடம்பெயர் சேவை இடை நிறுத்தப்பட்டுள்ளது எனலாம்.

திருமலை மாவட்டத்தில், காணி அமைச்சு, அவசர அவசரமாக இவ் நடமாடும் சேவையை நடத்துவதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. ஒருவேளை, 'அரசாங்கம் விடுதலைப்புலிகளிடம் சமர்ப்பித்துள்ள தற்காலிக நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பான நகல் திட்டத்தின் அடிப்படையில் விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தை மேசைக்குவரின் – அதற்கு முன்பாகவே இந்நடமாடும் சேவையை நடாத்தி சிங்களவர்கள் ஆக்கிரமித்த காணிகளைச் சட்டபூர்வமாக்கிக் கொடுக்கும் நோக்கிலேயே இச்சேவை நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது.

ஏனெனில், விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைக்கு வந்து – தற்காலிக நிர்வாகத்தைத் தானும் புலிகளிடம் வழங்கிய பின்னர் இத்தகையதொரு நடவடிக்கையானது, சிக்கல் நிறைந்ததாகவே இருக்கும் என்றதன் அடிப்படையிலேயே காணிக்கான பத்திரங்களைமுன்னதாகவே வழங்கிவிட காணி அமைச்சு தீர்மானித்திருந்தது எனலாம்.

தற்காலிக நிர்வாகக் கட்டமைப்பு தொடர்பாக வெளியாகியுள்ள தகவலின்படி, காணி தொடர்பான அதிகாரத்தை இக்கூட்டமைப்பிடம் வழங்க அரசாங்கம் தயாராக இல்லாதபோதும் – காணி அமைச்சு இவ்விடயத்தில் காட்டிய அக்கறையானது, ஆக்கிரமிப்பு விடயத்தில் அரசாங்கம் எத்தகைய தீவிரமாகவும், அக்கறையுடனும் செயற்படுகின்றது என்பதையே வெளிப்படுத்துவதாய் உள்ளது.

ஆனால், இத்தனைக்கும் தமிழ் மக்கள் தமது சொந்த நிலங்களில் குடியேறச் சிறிலங்கா அரசாங்கம் ஆவன செய்வதாக இல்லை. காணி அமைச்சர் ராஜித சேனாரட்ண அண்மையில், யாழ். குடாநாட்டிற்கு விஜயம் செய்து மக்களின் பிரச்சினைகள், நெருக்கடிகள் – குறிப்பாக காணி தொடர்பான பிரச்சினைகளைக் கேட்டறிந்துகொண்டாலும், அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வெதையும் அவர் வழங்கவில்லை.

அதாவது, தமிழ் மக்களின் வாழ்விடங்களை இராணுவம் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளதாகவும், உயர் பாதுகாப்பு வலயம் என்ற ரீதியில் அவர்களின் மீள்குடியேற்றத்திற்கு இராணுவம் அனுமதிக்காமை குறித்தும் அமைச்சரிடம் சுட்டிக்காட்டப்பட்டபோதும் அவர் அது குறித்து நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை. உயர்பாதுகாப்பு வலயம் என்ற இராணுவத்தினரின் நிலைப்பாடு அரசாங்கத் தரப்பால் முழு அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்றாகவே உள்ளது.

இவ்வாறாகத் தமிழர் தாயகத்தில் இராணுவத்தினரின் இருப்பிற்காக – தமிழ் மக்கள் தங்கள் சொந்த நிலத்தில் குடியேற ஏற்பாடுகளை மேற்கொள்ளாத அமைச்சர் திருமலை மாவட்டத்தில் தமிழர் தாயகத்தைச் சிங்களவர்களுக்குப் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளில் காட்டும் தீவிரமானது அவர் மீது மட்டுமல்ல, அவரது அரசாங்கத்தையே சந்தேகிக்க வைக்கின்றது.

இலங்கையில், இனப்பிரச்சினை தோற்றம் பெறுவதற்கும், தீவிரமடைவதற்கும் தமிழர் தாயகப் பிரதேசத்தை சிங்களக் குடியேற்றங்கள் மூலம் திட்டமிட்ட ரீதியில் ஆக்கிரமிக்க சிறிலங்கா ஆட்சியாளர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் முக்கிய காரணிகளில் ஒன்றாகும். மறுவளமாகக் கூறுவதானால், சிங்களக் குடியேற்றங்கள் மூலம் தமிழர் தாயகம் ஆக்கிரமிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்தும் நோக்கிலும், தமிழர் தாயகத்தைப் பாதுகாக்கும் நோக்கிலும் ஆரம்பிக்கப்பட்டதே தமிழீழ விடுதலைப் போராட்டமாகும்.

இவ்வாறானதொரு நிலையில், சுமார் 20 வருடங்கள் இடம்பெற்ற மோதல்களில் பெருமளவு இரத்தம் சிந்தப்பட்டுவிட்ட நிலையிலும், சிங்கள ஆளும் வர்க்கம் தமது ஆக்கிரமிப்புச் சிந்தனையை மாற்றிக் கொண்டுள்ளதா எனின் இல்லை என்றே பதில் அளிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை அமைச்சர் ராஜித சேனாரட்ணவின் நடவடிக்கைகள் உள்ளன. அதாவது, ஆக்கிரமிப்பு காரணமாக எழுந்த முரண்பாட்டினால் உருவாகிய யுத்தத்தினால் பெருமளவு இரத்தம் சிந்தப்பட்டு, நாடு குட்டிச்சுவராகிய போதும் ஆட்சியாளர்களுக்கு சிந்தனை மாறவில்லை என்றே கூறவேண்டியுள்ளது.

மாறாக, யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த அமைச்சர் ராஜித சேனாரட்ண யாழ். குடாநாட்டு மக்களின் நெருக்கடிகளை – குறிப்பாக மீள்குடியேற்றம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்து வைத்துவிட்டு இத்தகையதொரு முயற்சியை மேற்கொண்டாலும் ஓரளவிற்குத் தமது நிலைப்பாட்டிற்கு நியாயம் கற்பிக்க முற்பட்டிருக்கலாம். ஆனால், யாழ். குடாநாட்டு விஜயத்தை ஒரு கண்துடைப்பிற்கு மேற்கொண்டுவிட்டு, திருமலையில் நடமாடும் சேவையை நடாத்த முற்பட்டுள்ளமையானது அவரின் நடவடிக்கை குறித்து சந்தேகம் கொள்வதைத் தவிர வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை.

# புலிகள் நீட்டிய சமாதானக் கரத்தை அரசும் எதிரணியும் இறுகப்பற்றவேண்டும்

## ஜோசப் பரராஜசிங்கம் வலியுறுத்து

"விடுதலைப்புலிகள் சமாதான முயற்சிகளில் தொடர்ந்தும் நம்பிக்கை கொண்டவர்களாகவே செயற்படுகிறார்கள். எனவே அவர்கள் நீட்டியுள்ள சமாதானக் கரத்தை இறுகப்பற்றிப் பிடித்து நாட்டின் நிரந்தர சமாதானத்தை உருவாக்க வேண்டிய பாரிய பொறுப்பு அரசுக்கும் எதிரணிக்கட்சிகளுக்குமே உரியது."

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்;

சமாதான முயற்சிகள் தொடருமா எனும் சந்தேகம் தோன்றியுள்ளது. உண்மையில் எந்தவொரு விடயத்தையும் நல்ல நோக்குடன் முன்னெடுத்தால் வெற்றிபெறுவது நிச்சயம்.

அத்துடன் அன்று சிறிதோர் இயக்கமாக இருந்த விடுதலைப்புலிகள், கடந்த 20 ஆண்டு காலத்தில் பெரும் வளர்ச்சியடைந்து, உலகத்தில் இன்று ஒரு பலம் வாய்ந்த கெரில்லா இயக்கமாக மட்டுமன்றி, மரபுவழிப்போர் முறையிலும் தமிழர் தாயகத்தைக் காப்பாற்றக் கூடிய ஒரு படையாக மாற்றமடைந்துள்ளனர்.

இன்று இந்த நாட்டில் சமாதானச் சூழ்நிலை தோற்றுவிக்கப்பட்டு மக்கள் நடமாடும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது எனில் அதற்கு வித்திட்டவர்கள் விடுதலைப்புலிகள்தான் என்பதை எவரும் மறுக்க முடியாது.

விடுதலைப்புலிகள் மிகவும் பலம் வாய்ந்தவர்களாக இருந்தும்கூட தாமாகவே முன் வந்து ஒரு தலைப்பட்சமாக யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டதன் காரணமாகவே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 6 சுற்றுப்பேச்சுக்களும் நடைபெற்று யுத்த நிறுத்தமும் தொடர்கின்றது.

எனவே இதனை அரசும் எதிரணிக் கட்சிகளும் பயன்படுத்தி நிரந்தர சமாதானத்தை உருவாக்க வேண்டும்.

இலங்கை நீதி, சமாதான, ஒப்புரவுக்கான இயக்கம் ஏற்பாடு செய்த "இடை நிறுத்தப்பட்டுள்ள சமாதான முயற்சிகளை தடை தகர்த்து முன்னெடுப்பது" என்ற தலைப்பிலான அரசியல் கருத்தரங்கு நேற்று முன்தினம் கொழும்பு பொரளையில் உள்ள செடக் நிறுவனத்தில் இடம்பெற்றது. அதில் உரையாற்றியபோதே எம்.பி.ஜோசப் பரராஜசிங்கம் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்நிகழ்வில் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் பொதுசன ஐக்கிய முன்னணிப் பாராளுமன்ற உறுப்பினர் சுவில் பிரேமஜயந்த உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# வீதி அபிவிருத்திக்கென வரி அறவிட ஆகஸ்ட் மாதம் முதல் நடவடிக்கை

(கொழும்பு)

வீதிகளைப் பயன்படுத்தும் வாகனங்களிடமிருந்து அறவிடும் வீதி அபிவிருத்தி வரி எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி நடைமுறைக்கு வரும்.

இதன்படி, வாகனங்களை வருடந்தோறும் பதிவு செய்யும் போதும், பெற்றோல், டீசல் விநியோகத்தின் போதும் இந்த வரியை அறவிட அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதனால் பெற்றோலுக்கும் டீசலுக்கும் இதற்கென விசேட மேலதிக கட்டணம் விதிக்கப்படவிருப்பதால் அவற்றின் விலைகள் ஆகஸ்ட் முதலாம் திகதி முதல் உயரும்.

இலகு வாகனங்களின் நிறை ஆசனங்களின் தொகை அடிப்படையிலேயே இந்த வரி அறவிடப்படும்.

இதேபோல் பார வாகனங்களுக்கான வரி வேறு விதமாக அறவிடப்படும்.

வீதி அபிவிருத்தி வரி மூலம் கிடைக்கும் வருமானத்தில் 60 சத வீதம் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்படும்.

இவ்வரியை அறவிடுவது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள விசேட சபையொன்று அமைக்கப்படவிருக்கின்றது.

## நாற்பத்திரெண்டு பெண்கள் லெபனானிலிருந்து திரும்பல்!

(கொழும்பு)

லெபனானில் வேலை வாய்ப்பு பெற்றுச் சென்ற 42 பணிப்பெண்கள் நேற்று முன்தினம் காலை இலங்கைக்குத் திரும்பியுள்ளனர்.

டபிள்யூ- வை-878 லெபனான் நாட்டு விமானம் மூலம் நாடு திரும்பியுள்ள இவர்களில் அதிக மானவர்கள் பல வருடங்களாக லெபனான் நாட்டில் தொழில் புரிந்து வந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் வீட்டு வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்த காலப்பகுதியில் வீட்டு எஜமானியாலும், ஏனைய பல நபர்களினாலும் பல்வேறு கஷ்டங்களுக்கு உள்ளாக்கப்பட்டதாகக் கூறியுள்ளனர்.

## ஒரு இனிங்ஸ் 98 ஓட்டங்களால்

# 2ஆவது டெஸ்ரிலும் அவுஸ்திரேலியா வெற்றி

அவுஸ்திரேலியாவுக்கும், பங்களாதேஷுக்குமிடையே கேர்ன்ஸ் நகரில் நடைபெற்ற இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் நான்காவது நாளான நேற்று அவுஸ்திரேலியா ஒரு இனிங்ஸ் 98 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷை வீழ்த்தியுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை இரண்டுக்கு பூச்சியம் எனும் கணக்கில் அவுஸ்திரேலியா வென்றுள்ளது.

261 ஓட்டங்களைப் பெற்றால் இனிங்ஸ் தோல்வியை தவிர்க்கலாம் என்ற நிலையில் இரண்டாவது இனிங்சை ஆடத் தொடங்கிய பங்களாதேஷ் 163 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. முதல் இனிங்சில் 77 ஓட்டங்களைப் பெற்ற கனன் சகார் 2ஆவது இனிங்சில் 55 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழந்தனர்.

முன்னதாக முதல் இனிங்சில் பங்களாதேஷ் அனைத்து விக்கெட்டுக்களை இழந்து 295 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய அவுஸ்திரேலியா 4விக்கெட்டுக்களை இழந்து 556 ஓட்டங்களுடன் ஆட்டத்தை நிறுத்தியது.

இந்தத் தொடரின் நாயகனாக அவுஸ்திரேலிய வீரர் ருவெஸ் மக்கின் தெரிவாகினார். இவர் 2ஆவது டெஸ்ரிலும் 133 ஓட்டங்களைக் கொடுத்து 10 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

# இந்தியா–பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டிகள் விரைவில் ஆரம்பமாகலாம்

## - ஆசிய கிரிக்கெட் வாரியம் நம்பிக்கை

இந்தியா பாகிஸ்தானிடையே விரைவில் கிரிக்கெட் போட்டிகள் தொடங்கும் வாய்ப்பு இருப்பதாக ஆசிய கிரிக்கெட் வாரியம் தெரிவித்துள்ளது.

கார்கில் யுத்தம், இந்திய நாடாளுமன்றம் தாக்கப்பட்டமை என்பன காரணமாக இருநாட்டு அரசியல் உறவில் விரிசல் ஏற்பட்டது.

இதனால் இருநாட்டு கிரிக்கெட் அணிகளுக்கிடையேயான போட்டிகளும் தடைப்பட்டன.

பாகிஸ்தான் அணியுடன் கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்க இந்திய வீரர்களுக்கு மத்திய அரசு தடை விதித்தது.

இதனால் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியைத்தவிர, பிற போட்டிகளில் இரு அணிகளும் பங்கேற்க முடியாத நிலை காணப்பட்டது.

தற்போது இந்திய பாகிஸ்தான் அரசியல் உறவை மேம்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவரும் சூழ்நிலையில் இரு நாட்டு கிரிக்கெட் அணிகளும் போட்டிகளில் பங்கேற்கும் வாய்ப்பு உருவாகியிருப்பதாக ஆசிய கிரிக்கெட் வாரியம் தெரிவித்துள்ளது.

அடுத்த ஆண்டு பெப்ரவரி அல்லது மார்ச் மாதத்தில் இந்திய அணி பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் வாய்ப்பு இருப்பதாக ஆசிய கிரிக்கெட் வாரியத் தலைவர் அட்சப் தெரிவித்துள்ளார்.

இவரது இந்த தெரிவிப்பு குறித்து இந்திய கிரிக்கெட் வாரியம் கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை.



# தமிழர் கோரும் ஆட்சியதிகாரங்கள்

# பொருத்தமான முறையில் வழங்கப்படவேண்டும்

## நு ஆ பொதுச் செயலாளரை சேகு இஸ்ஸத்தீன்

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் வாழ்கின்ற தமிழர்கள் நீண்ட காலமாக போராடி வருகின்றனர். அவர்களுக்கு உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்று தேசிய ஐக்கிய முன்னணியின் பொதுச்செயலரும் நாடாளுமன்ற (ஐஆ)உறுப்பினருமான சேகு இஸ்ஸதீன் தெரிவித்துள்ளார்.

தமிழர்கள் கோரிவருகின்ற வகையிலானஆட்சிஅதிகாரங்கள் பொருத்தமான முறையில் அவர்களுக்கு வழங்கப்படவேண்டும்.

முஸ்லிம் மக்களும் இந்தப் பிரச்சினையில் சிக்கியுள்ளார்கள் அவர்களுடைய தனித்துவத்தை அங்கீகரிக்கும் வகையிலும் பொருத்தமான ஏற்பாடுகளும் அதிகாரங்களும் வழங்கப்படவேண்டும் எனக் கூறிய அவர் இது தொடர்பாக ஜே.வி.பி.யோடு நடைபெற்ற சந்திப்பில் இத்தகையதீர்வொன்றை எட்டுவதற்கு அரசியல் அமைப்புச் சட்டத்தில் மாற்றம் கொண்டு வரப்படவேண்டும் என நான்வலியுறுத்தவுள்ளேன் என்றார்.

இச்சந்திப்பில் தே.ஐ. முன்னணியின் சார்பில் அதன் தலைவி பேரியல் அஷ்ரப், கிஸ்புல்லா, ஆகியோரும் ஜே.வி.பியின் சார்பில் விமல் வீரவன்ச, நந்தன குணதிலக விஜிதகேரத் ஆகியோரும் பங்கு பற்றியதாகவும் அவர் கூறியுள்ளார்.

# ஈராக்கிற்கு 17000இந்தியப் படையைக்கோரி

# அமெ.ஆயுதப்படைத் தலைவர் நேற்று புதுடில்லி விஜயம்



அமெரிக்காவின் ஆயுதப் படைகளின் தலைவர் ஜெனரல் றிச்சட் மியர்ஸ் புதுடில்லிக்கு நேற்று விஜயம் செய்துள்ளார்.

ஈராக்கிற்கு இந்தியப்படையின் 17ஆயிரம் பேரைக்கொண்ட இரு அணிகளை அனுப்பிவைப்பதற்கு சாதகமான சூழலை உருவாக்குவதை இலக்காகக்கொண்டு அவர் இந்திய உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்.

இந்திய கடற்படை உயர் அதிகாரியான அட்மிரல் மாத்லென் திராசிங் விமானப்படைத் தளபதி கிருஸ்ணசுவாமி ஆகியோரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இன்று இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் விஜி பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பிரதேஷ் மிஸ்ரா ஆகியோரை அமெரிக்க இராணுவ அதிகாரி சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

இவரின் இந்த விஜயம் குறித்து கருத்து வெளியிட்டுள்ள இந்திய வெளியுறவுத்துறை அமைச்சின் பேச்சாளர் நெவ்ரிஜ் சர்மா இரு நாடுகளுக்குமிடையிலான பாதுகாப்புக் கொள்கைக்குழுவின் கூட்டத்தை அமெரிக்காவில் அடுத்த மாதம் ஆறாம் திகதி நடத்துவது பற்றி பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அத்துடன் ஈராக்கின் தற்போதைய சூழ்நிலை குறித்து இந்திய அதிகாரிகளுக்கு விளக்கியுள்ளதோடு இந்திய அமைதிப்படையை ஈராக்கிற்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொண்டார் என கூறியுள்ளார். ஐக்கிய நாடுகள் அங்கீகரிக்குமானால் படைகளை அனுப்புவது குறித்து இந்தியா தனது முடிவை மீளாய்வு செய்யும் என்று தெரிவித்துள்ளது.

# இயல்புநிலை ஏற்பட்டாலேயே அகதிகள் திருப்பி அனுப்பப்படுவர்

## இந்தியா சிறிலங்கா இணக்கம்

இலங்கையில் முழுமையான இயல்பு நிலை ஏற்பட்டால் மாத்திரமே தமிழ் நாட்டில் இருக்கும் அகதிகளைத்திருப்பியனுப்புவதில் முன்னேற்றம் ஏற்படும் என இந்தியாவும் சிறிலங்காவும் ஏற்றுள்ளன.

இதேவேளை தாயகம் திரும்பும் அகதிகளின் பாதுகாப்பு புனர்வாழ்வு தொடர்பான விடயங்களை மனிதாபிமானக் கண்ணோட்டத்தோடு அணுகுவதற்கு இருநாடுகளும் தொடர்ந்து ஒத்துழைப்போடு செயற்படுவதற்கும் இணக்கியுள்ளன. இந்திய- சிறிலங்கா வெளிவிவகார செயலர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தை புதுடில்லியில் இடம்பெற்றபோது இந்த விடயங்களில் இணக்கம் காணப்பட்டது.

இதேவேளை கடற்றொழிலாளர்களின் பிரச்சினை தொடர்பாக ஒத்துழைப்போடு நடவடிக்கைகளை மேற்கொள்வதென்று இருநாட்டு கடற்படைபிரதிநிதிகளும் இணக்கியுள்ளனர்.

## விமானக்குண்டு...

திரபுரத்தைச் சேர்ந்த விநாயகமூர்த்தி கருணாகரன், பஞ்சலிங்கம் பாலேஸ்வரன்,பேனாட்கோதயா பரன், நாகலிங்கம் தயாபரன், பால சிங்கம் ஜெகதீஸ்வரன், கோபால சிங்கம் ஜெயகோபால், கணபதிப் பிள்ளை ஜெயலிங்கம் ஆகியோரின் நினைவாக மேற்படி சம்பவ இடத்தில் நினைவுத்தூபி அமைக் கப்பட்டுள்ளது.

இத்தூபி திறப்பு நிகழ்வில் பொதுச்சுடரினை கிளி. மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர் சு.பசுபதிப்பிள்ளை, உருத்திரபுரம் வடக்கு கிராம சேவகர் வை.வைத்தீஸ்வரன் ஆகியோரும் தமிழீழ தேசியக் கொடியினை கிளி. மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூவிழியும் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து நினைவுத்தூபியினை மாவீரர் வீரவேங்கை நாவரசனின் தந்தையார் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். ஒன்பது பேரின் பெயர்களும் பொறிக்கப்பட்ட நினைவுக் கற்களை அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் அவர்கள் திரைநீக்கம் செய்து மலர்மாலை அணிவித்தார். தொடர்ந்து ஒன்பது பேரின் நினைவுத் தூபிகளுக்கு கொல்லப்பட்டவர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்களால் சுடரேற்றி மலர்மாலை அணிவிக்கப்பட்டது.

தொடர்ந்து அரங்க நிகழ்வுகளில் உருத்திரபுரம் வடக்கு கிராம சேவையாளர், தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சு.பசுபதிப் பிள்ளை, கோட்டக்கல்வி அதிகாரி மு.சண்முகராசா ஆகியோர் கருத்துரைகளையும்,

தமிழீழ அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் சிறப்புரையினையும் நிகழ்த்தினர். தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

மேற்படி நிகழ்வில் பொதுமக்கள், போராளிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (பா)

## கண்காணிப்பு...

பொறுத்தே தமது அடுத்த நடவடிக்கை அமையும் என்று கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் அக்னஸ் தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட விடுமுறை காரணமாக நோர்வே சென்றிருக்கும் கண்காணிப்புக்குழுவின் தலைவர் நோர்வே அரசின் பிரதிநிதிகளைச் சந்தித்து இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்துவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குரங்குப்பாஞ்சான் முகாம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் கடந்த 23ஆம் திகதி கண்காணிப்புக்குழுவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருந்தார். அந்தக் கடிதத்தில் விடுதலைப்புலிகளின் முகாம் பல வருடங்களாக அதே இடத்தில் இருந்தது என்றும் அந்த முகாம் அமைந்துள்ள இடம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியின் எல்லையே என்றும் தெரிவித்திருந்ததாக விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகம் தெரிவித்துள்ளது.

எமது கட்டுப்பாட்டிலிருக்கும் பிரதேசத்தில் பல வருடங்கள் இருந்த இந்த முகாமை மூடுமாறு கேட்பது போர்நிறுத்த உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்குள் அடங்கவில்லை. எனவே அந்த முகாமை அகற்றுதல் முடியாது என்றும் விடுதலைப்புலிகள் கூறியுள்ளமை தெரிந்ததே.

# பிணை மனு நிராகரிப்பு

(கொழும்பு)

பிந்துனுவெவ படுகொலை சம்பவம் சம்பந்தமான வழக்கில் பொய்ச்சாட்சியம் கூறியதாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் நான்கு சாட்சிகளின் பிணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

மூவரைக் கொண்ட மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழு நேற்று இந்த விசாரணையை மேற்கொண்டபோது நிராகரித்தது. இவர்கள் அனைவரையும் வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அத்துடன் பொய்ச்சாட்சிகள் வழங்கிய சாட்சிகளுக்கெதிராக வழக்கொன்றைத் தாக்கல் செய்யுமாறு சட்டமா அதிபரை நீதிமன்றம் கேட்டுள்ளது.

## மாவிட்டபுரம்...

செல்வதற்கும் படையினரால் தடைவிதிக்கப்பட்டிருந்தது.

ஆலயத்தைச் சூழவும் ஆலய வளாகத்தினுள்ளும் பல நூற்றுக்கணக்கான படையினர் குவிக்கப்பட்டிருந்ததுடன் ஆலயச் சூழலை விட்டு சிறிதூரம் சென்று மர நிழல்களின் கீழ் அமரக் கூட மக்களைப் படையினர் அனுமதிக்க வில்லை. அத்துடன் ஆலயத்தினுள்ளும் படையினர் சீருடைகளுடன் நடமாடியதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

இதேவேளை நேற்று ஆடி அமாவாசை தினத்திற்காக கீரிமலைக் கோவில் பிரதேசத்திற்குச் சென்ற மக்களையும் படையினர் கடுமையாகச் சோதனைக் கெடுபிடிகளுக்குள்ளாக்கியுள்ளார்கள். தெல்லிப்பளைச் சோதனைச் சாவடியிலிருந்து கீரிமலை வரையும் மக்கள் சென்ற வாகனங்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு இராணுவத்தினர் ஏறிச் சென்றுள்ளார்கள். அத்துடன் கீரிமலைக் கடலில் குறிப்பிட்ட பகுதிக்கு அப்பால் சென்று நீராடிய பக்தர்கள் படையினரால் துரத்தப்பட்டுள்ளார்கள். (33)

-லண்டன் 8-வது தமிழர் விளையாட்டு விழாவில் -

# வலைப்பந்தாட்ட இறுதியாட்டத்தில் "தமிழர் தாயக அணி" வெற்றி

நேற்று லண்டன் 'நோர்மன் பாக்' மைதானத்தில் நடைபெற்ற 8வது தமிழர் விளையாட்டுவிழாவில் இடம்பெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் தமிழீழவிளையாட்டுத்துறையால் தெரிவு செய்யப்பட்ட தமிழர் தாயக அணியினர் இறுதியாட்டத்தில் வெற்றி பெற்று சம்பியனாகியுள்ளனர். இப்போட்டியின் இறுதியாட்டத்தில் பிரித்தானியாவில் உள்ள சுண்டுக்குளி



மகளிர் கல்லூரி பழைய மாணவியர் அணிக்கும் தமிழர் தாயக தெரிவு அணிக்குமிடையே போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் 12க்கு 3என்ற புள்ளிஅடிப்படையில் தமிழர் தாயக அணி வெற்றிபெற்றுள்ளது.

இதேபோன்று பிரித்தானிய தமிழர் தெரிவுஅணிக்கும் தமிழர் தாயக அணிக்குமிடையேயான போட்டியில் 25-9 என்ற புள்ளி அடிப்படையில் தமிழர்தாயக அணி வெற்றி பெற்றுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும் இந்த 8வது தமிழர் விளையாட்டு விழாவில் வலைப்பந்தாட்டம் உதைபந்தாட்டம், கரபந்தாட்டம், நீச்சல் போட்டிகள் மெய்வல்லுனர் போட்டிகள் என்பன இடம்பெற்றிருந்தன.

# ஆண்டு இறுதிக்குள் 10 ஆயிரம் பேரை இராணுவத்தில் இணைக்க முடிவு

(கொழும்பு)

இவ்வாண்டு இறுதிக்குள் பத்தாயிரம்பேரை இராணுவத்தில் புதிதாக இணைத்துக்கொள்வதென சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக வரும் செப்ரெம்பர் மாதம் நாடு தழுவிய ரீதியில் இந்த ஆட்சேர்ப்பு நடைபெறவுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சு அதிகாரி கூறியுள்ளார்.

கடந்தபல வருடங்களில் இராணுவத்திலிருந்து சுமார் 50ஆயிரம் பேர் தப்பியோடியுள்ளனர்.

# 'யூலை-1983 மீண்டும் வேண்டாம்' கொழும்பில் சிறப்பு நிகழ்ச்சி

(கொழும்பு)

"யூலை-1983 மீண்டும் வேண் டாம்" என்ற தொனிப்பொரு ளில் நாளை மறுதினம் இலங்கை மன்றக் கல்லூரியில் சிறப்பு நிகழ்வு ஒன் நடைபெறவுள்ளது.இந்த நிகழ்வையொட்டி நூற்றுக்கும் மேற்பட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் இணைந்து இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

## தமிழ் மக்களின்...

கூட பல குறைபாடுகள் உள்ள நிலையிலும் மக்களுடைய எதிர்பார்ப்புக்கள் முழுமையாக நிறைவு செய்யப்படாத நிலையிலும் நாங்கள் அதனை நிராகரிக்க வில்லை. எமது தலைமைப்பீடம் அதனைப் பரிசீலித்துசட்டவல்லுனர்களோடு ஆலோசித்து வருகிறது.

அரசாங்கம் சமர்ப்பித்தவரைவை விரிவாக ஆராய்ந்த பின்னர் எமது மக்களுடைய எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்ற வகையில் நாமும் ஒரு வரைவை சிறிலங்கா அரசாங்கத் திடம்கையளிப்போம்.அதனை அவர்கள் ஏற்றுக்கொண்டு பேச முன்வந்தால் நாமும் இடைநிறுத் திய பேச்சைத் தொடர்வோம் என தெரிவித்த சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள்

போர்நிறுத்த ஒப்பந் தத்தின் கீழ் மக்களின் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுப்பதாக அப்போது உறுதியளிக்கப்பட்டது எனினும் 18 மாதங்கள் கடந்த நிலையிலும் அவை பூரணமாக நிறைவேற்றப்படவில்லை.

போர்நிறுத்த சூழலில் படைபலத்தைக் கட்டியெழுப்புவது மீண்டும் போருக்குச் செல்வதற்காக அல்ல சமாதானப் பாதையிலும் நாம் முன்னேறிச் செல்வதற்கு பலம் அவசியம். எமது பலமே பேச்சுவார்த்தையில் தலைநிமிர்ந்து கௌரவமாக கலந்து கொள்வதற்குக் காரணமாகும்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக்காலத்திலேயே தமிழ் மக்கள் முன்பைவிட பேரழிவுகளைச் சந்தித்தார்கள். தற்போதுள்ள அதிகாரப் போட்டி காரணமாக தென்னிலங்கையில் ஸ்திரமற்ற ஆட்சிச்சூழல் - அரசியல் சூழல் உள்ளது. தென்னிலங்கை அரசியல் சூழ்நிலை எந்த நேரத்தில் எப்படி மாறும் என்று அனுமானிக்க முடியாதிருக்கிறது. எனினும் நாம் பலமாக இருந்து கொண்டு சமாதானக் கதவைத் திறந்து வைத்துள்ளோம். இதனைச் சரியாகப் புரிந்து கொண்டு சமாதான வழியில் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முன்வந்தால் அதனை மகிழ்வோடு வரவேற்போம்.

பேரினவாதிகள் தமிழ் மக்களது பிரச்சினையை சமாதான வழியில் தீர்ப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு இன்னமும் ஏற்படவில்லை என மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மூத்த தளபதி கேணல் கருணா, சிறப்புத் தளபதி றமேஸ், மகளிர் படையணித் தளபதி நிலாஜினி, போராளிகள், பொது மக்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்கள்,ஆசிரியர் கலாசாலை மாணவர்கள் எனப் பெருந்தொகையானோர் கலந்து கொண்டனர்.

பாடுமீன் இசைக் கல்லூரி மாணவர்களின் ஞானி இசைக்குழுவின் இசை நிகழ்ச்சியும் மற்றும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## உள்ளூர்...

தற்போது இரத்மலான-பலாலி சேவை மட்டும் நடைபெற்று வருகிறது. ஏனைய உள்ளூர் சேவைகள் நாட்டில் நடைபெற்றுவந்த யுத்தம் காரணமாக நிறுத்தப்பட்டது என்றும் அவர் கூறியுள்ளார்.

## இந்திய...

றான சம்பவங்கள் மீண்டும் ஏற்படாமல் இருப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூலை மாதம் 29ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.